# இதயம் பாடும் இனிய பாடல்

இதயம் பாடும் இனிய பாடல்
இறைவா உமக்காக
இகத்தில் வாழும் படைப்பு யாவும்
இறைவா எனக்காக
நினைத்தேன் நினைத்தேன் நான் தர
அனைத்தும் உந்தன் காணிக்கை - என் (இதயம்)

1
பூத்துக் குலுங்கும் மரங்களும் - இங்கு
காய்த்து கனிந்த கனிகளும்
ஓங்கி உயர்ந்த மரங்களும் - அதை
சூழ்ந்து வளர்ந்த செடிகளும்
இயற்கை தூவும் கவிதைகள் - யாவும்
இறைவன் தந்த கொடைகளே
நினைத்தேன் நினைத்தேன் நான் தர
அனைத்தும் உந்தன் காணிக்கை –என் (இதயம்)

2
பறந்து திரியும் பறவைகள் - அலை
பாயும் கடல் வாழ் விலங்குகள்
காற்றும் கடலும் கார்முகில் - வான
வில்லும் நிலவும் விண்மீன்களும்
இயற்கை தூவும் கவிதைகள் - யாவும்
இறைவன் தந்த கொடைகளே
நினைத்தேன் நினைத்தேன் நான் தர
அனைத்தும் உந்தன் காணிக்கை –என் (இதயம்)